**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். MC 2 / 2023**
**வழக்கு சாட்சி. எ.ம.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | முகமது ஷஜகான் | **வயது** | : | 41 /2026 |
| **தந்தை பெயர்** | : | முகமது கனி | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | அறந்தாங்கி | **தொழில்** | : | இ சேவை மையம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**
**Both side Counsel present.**
**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 04.02.2026**

**எ.ம.சா.1**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. மனுதாக்கல் செய்துள்ளது எனது தகப்பனார். ஜீவனாம்சம் கேட்டு மனு கொடுத்துள்ளார். மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மூத்த சகோதரர் முகமது ஜீயாவூதின் என்றால் சரிதான். அவர் மாதம் இரண்டு லட்சம் வருமானம் ஈட்டி வருவதாக கூறப்படுவதற்கு எவ்விதமான ஆவணங்களும் இல்லை என்றால், சரிதான். மற்றொரு சகோதரர் முகமது நிசாரூதின் ஆட்டோ டிரைவராக இருந்து வருகிறார் என்றால், சரிதான். அவரும் மாத வருமானம் முப்பது ஆயிரம் சம்பாதிப்பதாக கூறுவதற்கு ஆவணங்கள் ஏதும் சமர்பிக்கவில்லை என்றால், சரிதான். எனது சகோதரர் ஆட்டோவை வாடகைக்கு எடுத்து தான் ஓட்டினார் என்றால், இல்லை அவர் பெயரில் தான் ஓட்டினார்.

2. அவர் ஓட்டுநர் உரிமம் வைத்திருந்ததால் ஓட்டுநர் உரிமத்தை ஆட்டோவில் ஒட்டி இருப்பதை பார்த்து நான் சொல்கிறேன் என்றால், இல்லை, அவர் பழைய ஆட்டோவை விலைக்கு வாங்கி ஓட்டிவந்தார். தற்சமயம் ஆட்டோ ஓட்டி வந்த சகோதரர் குவைத்தில் இருந்து வருகிறார் என்றால், சரிதான். அவர் சம்பாதிப்பது அவரது குடும்பத்திற்கே போதாது என்றால், எனக்கு தெரியவில்லை. அவர் குவைத்தில் ஐம்பது ஆயிரம் சம்பாதிப்பதாக கூறுவது பொய் என்றால், தோராயமாக சொன்னேன். மனுதாரர் ஆன எனது தகப்பனார் என்னை பெற்றெடுத்து வளர்த்து எல்லா வகையான செலவுகளையும் செய்து வந்தார் என்று சொன்னால், சரிதான். பள்ளி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரில் என்னை படிக்க வைத்தார் என்றால், சரிதான். நான் பள்ளிக்கூடம் மற்றும் கல்லூரி போன்றவற்றின் கல்விக் கட்டணத்தை மனுதாரரான எனது தகப்பனார் தான் செலுத்தினார் என்றால், சரிதான். ஆனால் முதல் வருடம் மட்டுமே எனது தகப்பனார் செலுத்தினார் மற்ற இரண்டு வருடங்கள் நான் பகுதிநேர பணிக்கு சென்று கல்வி கட்டணத்தை செலுத்தினேன்.

3. நான் நானே வேலைபார்த்து படித்தது என்று சொல்லுவது பொய் என்றால், சரியல்ல. பிகாம், எம்காம் படிப்புகள் நான் தொலைதூரக் கல்வி மூலம் நானாக கற்றேன். நான் தொலைதூரக் கல்வி மூலம் கற்ற படிப்பிற்கும் செலவினத்தை மனுதாரரான எனது தகப்பனார் தான் செய்தார் என்றால், சரியல்ல. பரமத்தி வேலூரில் உள்ள SET

கல்லூரியில் படித்தேனா என்றால், சரிதான். **என்னிடம் காண்பிக்கப்படும் கல்விக்கட்டண ரசீது மேற்படி கல்லூரியில் வழங்கப்பட்டதாகும். அது ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேற்படி கல்விக்கட்டண ரசீது பணம் நான் செலுத்தியது ஆகும். அது எனது தகப்பனாரின் பொறுப்பில் இருந்தது ஆகும். நான் பொய் சொல்கிறேன் என்றும், மேற்படி கல்விக்கட்டண ரசீது எனது தகப்பனார் செலுத்தியது தான் அதனால் தான் அவருடைய பொறுப்பில் இருக்கிறது என்றால், சரியல்ல. நான் என்னென்ன கம்பெனியில் வேலை செய்த விவரத்தினையும், மனுதாரரான எனது தந்தைக்கு மாதாந்திரமாக எந்த தேதியில் எவ்வளவு பணம் அனுப்பினேன் என்ற விவரத்தினை எனது எதிருரையிலும், அதற்கான ஆவணத்தினையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால், சரிதான். 2007–2012 வரை மனுதாரரான எனது தகப்பனாருக்கு பணம் அனுப்பியதற்கான ஆவணச் சான்றுகளை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

5. நான் நேரடியாக தான் பணம் கொடுத்தேன். நான் நேரடியாக கையில் பணம் கொடுத்தேன் என்று எனது எதிர் உரையில் சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். 2013 ஆம் ஆண்டு முதல் இ சேவை மையம் நடத்தி வருகிறேன் என்று சொன்னால், சரிதான். கடவு சீட்டு வழங்குவதற்கான சேவைகளும் அதில் வரும் என்றால், சரிதான். அனைத்து இணையதள சேவைகளும் செய்து வரப்படுகிறது. மேற்படி இசேவை மையத்தினை எனது தகப்பனார் அதிக செலவு செய்து அவருக்கு தெரிந்த அரசியல் பிரமுகர்களை வைத்து ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றால், சரியல்ல. நான் எனது சொந்த முயற்சியில் மாவட்ட தொழில் மையத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படும் மானிய கடனின் மூலம் கடன் பெற்று இசேவை மையத்தினை முழுவதுமாக அமைத்தேன். ரூ.285000/– பணத்தினை மேற்படி தொழில் மையத்தில் இருந்து பெற்றேன். மேற்படி கடனை கட்டிவிட்டேன் என்று சொன்னால், சரிதான்.

6. நான் வீடு கட்டி இருக்கும் இடம் எனது தகப்பனார் பேரில் பீ மெமோ ஏற்பட்டு அவர் பெயரில் இருந்த இடம் என்று சொன்னால், சரியல்ல. என் பெயரில் தான் பீ மெமோ இருந்து வருகிறது. மேற்படி இடம் புறம்போக்கு இடம் என்று சொன்னால், சரிதான். எனக்கு பீ மெமோ ஏற்படுவதற்கு முன்பாக அந்த இடம் யார் பெயரில் பீ மெமோ ஏற்பட்டிருந்து என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படுள்ள ஆவணங்களில் நான் வீடு கட்டி இருக்கும் இடம் முன்பு மனுதாரரான எனது தகப்பனாரின் பெயரில் பீ மெமோ ஏற்பட்டிருப்பது என்பதை காண்பிக்க கூடியது என்றால், தவறு. அது எனது தாயார் பெயரில் இருந்தது. நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரரான எனது தகப்பனாரின் பேரில் இருந்த இடத்தினை அவர் என் பெயருக்கு மாற்றி தந்தார் என்று சொன்னால், ஆமாம் எனது தாயார் பெயரில் இருந்தது எனது பெயருக்கு மாற்றி தந்தார். மேற்படி இடத்தில் நான் வீடு கட்டவும், மின் இணைப்பு பெறவும் மனுதாரரான எனது தகப்பனாரிடம் ஒப்புதல் கடிதம் கொடுத்தார் என்றால், சரியல்ல.

7. எனது திருமணத்திற்கு பின்பு தான் வீடு கட்டப்பட்டது என்றால், சரியல்ல. நான் வீடு கட்டி வசிக்கும் இடம் கான்கிரிட் வீடு என்றால், சரிதான். எனது தாயார் 2007 ஆம் ஆண்டு இறந்தார் என்றால், சரிதான். எனது தாயார் இறந்த 2007 ஆண்டு முதல் மனுதாரரான எனது தகப்பனார் தனியாக தான் இருந்து வருகிறார் என்றால், சரிதான். எனக்கு 2015 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. 2007 ஆம் ஆண்டு முதல் திருமணத்திற்கு முன்பு வரை எனது தகப்பனார் தான் எனக்கு உணவு, உடை,

உறைவிடம் ஆகியவற்றை பார்த்து வந்தார் என்றால், சரிதான். என்னிடம் கார் உள்ளதா என்றால், இல்லை. TN-55-RV-0299 நிசான் மெருன் கலர் கார் என்றால், இல்லை அந்த கார் ரெனால்டு KWID கார் ஆகும்.

8. அது இறவல் வாங்கி வைத்துள்ளேன். நான் இறவல் வாங்கி வைத்துள்ளேன் நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் நடத்தி வரும் இசேவை மையம் மூலம் மாதாந்திரமாக இரண்டு லட்சம் ரூபாய் சம்பாதித்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. அதனால் தான் எனது மனைவிக்கும், எனக்கும் தனியாக இருசக்கர வாகனம் வைத்து வருகிறோம் என்று சொன்னால், சரிதான் தற்போது சாட்சி மாற்றி ஒரே இருசக்கர வாகனம் வைத்துள்ளேன் என்று சாட்சியம் அளிக்கிறார். எனது குழந்தைகள் SFT தனியார் பள்ளியில் படித்து வருகிறார் என்று சொன்னால், சரிதான். தற்சமயம் இரண்டு ஆண்டுகளாக படித்து வருகிறார்கள். அதுவும் RTE திட்டத்தில் பயின்று வருகிறார்கள். நான் மாதம் இருபது ஆயிரம் தான் வருமானம் வருகிறது என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

9. நான் வருமானவரி கட்டுகிறேனா என்றால், இல்லை. எனது தகப்பனாருக்கு வேறுவித வருமானமோ, சொத்துக்களோ இல்லை என்று சொன்னால், சரிதான். எனது தகப்பனாருக்கு எவ்வித வருமானமும் இல்லை எனவும், அவரது பிள்ளைகளான எங்களை நம்பி தான் வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால், சரிதான். எனது சகோதரர்கள் நல்ல நிலைமையில் இல்லை, நான் தான் நல்ல நிலைமையில் இருக்கிறேன் அதனால் தான் அவர் என்னிடம் ஜீவனாம்சம் கேட்கிறார் என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனாருக்கு இடுப்பில் அடிபட்டு வைத்தியம் பார்த்து வருகிறார் என்று சொன்னால், சரிதான்.

10. எனது தகப்பனாருக்கு ஏற்படும் மருத்துவ செலவு மற்றும் உணவு மற்றும் இதர செலவினங்களுக்கும் சேர்த்து தான் ஜீவனாம்சம் கேட்டு இருக்கிறார் என்றால், சரிதான். எனது தகப்பனாருக்கு நான் ஜீவனாம்சம் அளிக்க வேண்டும் என்று சொன்னால், சரிதான். மனுதாரர் மாதம் ரூ.25000/- கேட்டுள்ளார் அதை கொடுப்பதற்கான தகுதி எனக்கு உள்ளது. நான் ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/-எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**அறந்தாங்கி.**